FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323731

1. District : Chennai மாவட்டம் | PS: VEAC, CC-V காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 03/AC/2026/CC-V மு.த.அ. எண் | Date: நாள் 30.09.2026

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act (As Amended in 2018) | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act 1988. | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 29.09.2026 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period நேர அளவு around 11.45 hrs | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.09.2026 | Time : நேரம் 17.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Door No. 101, Navalar Nagar, Thendral Colony, 5th Cross Street, Annanagar, Chennai-40.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : 15 kms District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : D. Saravana Perumal | (b) Father's/ Husband's Name : K. Dharapal
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி Door No. 91c, Lakshmipuram 1 Street, Villivakkam, Chennai-49.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. Anilkumar, Assistant Engineer (OSM) TANGEDCO, Annanagar West, Chennai-40.
   (2) Dessigu, Foreman, O/o. The AE (OSM), TANGEDCO, Annanagar West, Chennai-40

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

D. Sd/- 30/9/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.09.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.30 hrs

Name: பெயர் 30.09.2026
Rank: நிலை .....No. எண் .....

K.BINDHU
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Chennai City-V,
Alandur, Chennai-16.

...continuation to column No.12 of FIR in Crime No.03/AC/2026/CC-V

<u>பணிந்தனுப்பப்படுகிறது</u>, 29.09.2026-ந்தேதி மாலை 05.15 மணிக்கு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-5ன் காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது புகார்தாரர் D.சரவணப்பெருமாள், த.பெ.K.தனபால் (லேட்), கதவு எண்.9/C, லட்சுமிபுரம் முதல் தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 என்பவர் என் முன்பாக ஆஜராகி ஒரு புகார் மனுவினை சமர்ப்பித்தார். நான் அந்த புகார்மனுவினை பெற்றும், படித்து பார்த்தும் அதனை தொடர்ந்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் பின்னர் புகார் மனு சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி பொறியாளர் திரு.அணில் குமார் மற்றும் போர்மேன் திரு.தேசிங்கு என்பவர்களின் முன் நடத்தையும் புகார் மனுவின் உண்மைத்தன்மையும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் கூறப்பட்டுள்ள கையூட்டு தொடர்பான குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருந்ததால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும் இப்புகார் மனுவின் தன்மைக்கேற்ப இன்று 30.09.2026 ம் தேதி காலை 07.00 மணிக்கு திரு.அணில்குமார், உதவிப்பொறியாளர் மற்றும் திரு.தேசிங்கு, போர்மேன், மின்வாரிய அலுவலகம், அண்ணாநகர் மேற்கு, சென்னை என்பவர்கள் மீது சட்டப்பரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம் 2018) சட்டம் 1988 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் D.சரவணப்பெருமாள், த.பெ.K.தனபால் (லேட்), கதவு எண்.9/C, ட்சுமிபுரம் முதல் தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 அய்யா, நான் கடந்த 25 வருடங்களாக சென்னை வில்லிவாக்கம் நாதமுனி சிக்னல் அருகில் மருத்துவ ஆராய்ச்சி கூடம் மற்றும் மருத்துவ தொழிற்கல்வி (M/s.தனபாலன் கல்வி அறக்கட்டளை) Lab X-Ray ECG, Nursing Assistant Course நடத்தி வருகிறேன். எனக்கு சொந்தமான அண்ணா நகர் தென்றல் காலனியில் உள்ள கதவு எண்.10/11, நாவலர் நகர், தென்றல் காலனி, 5வது குறுக்கு தெரு, அண்ணா நகர், சென்னை-40 என்ற பட்டா இடத்தில் Plan approval வாங்கி தரைதளம் முன்னதாகவே கட்டி அதே கட்டிடத்தில் புதிதாக முதல் தளம் கட்டியுள்ளேன். அதற்கு கூடுதலாக EB கனெக்ஷன் தேவையுள்ளதால் அண்ணாநகர் மின்வாரிய அலுவலகத்திற்கு கடந்த 2026 பிப்ரவரி மாதம் சென்று உதவி பொறியாளர் திரு.அணில்குமார் அவர்களை சந்தித்து கேட்டேன். அதற்கு

அவர் மின்இணைப்பு வழங்க ரூபாய் 1 லட்சம் ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் 3-phase கனெக்ஷன் விண்ணப்ப கட்டணம் ரு.30,000/- தானே என்று கேட்டேன். அதற்கு அவர் அப்போது நீங்க online-ல் அப்ளிகேஷன் பேட்டுட்டு வாங்க என்று தெரிவித்தார், எனவே நான் 09.03.2026-ம் தேதியன்று Online மூலம் 3-phase கனெக்ஷனுக்கு விண்ணப்பம் செய்தேன். பின்னர் 2 நாட்கள் கழித்து உதவி பொறியாளர் திரு.அணில்குமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து online-ல் விண்ணப்பம் செய்த விபரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் நான் உங்கள் பில்டிங்கை நேரில் வந்து ஆய்வு செய்து தகவல் தெரிவிக்கிறேன் என்றார். பின்னர் ஒரு வாரம் கழித்து எனக்குரிய இடத்துக்கு திரு.அணில்குமார் அவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்துவிட்டு என்னுடைய அலுவலக போர்மேன் திரு.தேசிங்கு அவர்களை உங்களை தொடர்பு கொள்வார் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி இரண்டு வாரங்கள் கழித்து போர்மேன் தேசிங்கு எனது இடத்தை ஆய்வு செய்கிறேன் என்ற பெயரில் என்னிடம் வந்து உங்களது அனைத்து வேலைகளையும் ஏ.இ திரு.அணில்குமார் அவர்கள் முடித்து தருவதாகவும் அதற்கு ரூபாய் 50,000/- லஞ்சமாக கேட்டார். அதற்கு நான் அவரிடம் எதற்கு நான் இதற்கு லஞ்சம் தரவேண்டும் என்று கேட்டதற்கு என்னை 6 மாதமாக அலய வைத்து இன்று வரை நான் கேட்ட கூடுதல் மீட்டர் பொறுத்தவில்லை, மேலும் 21.09.2026 அன்று மதியம் சுமார் 1.40 மணியளவில் எனது மொபைல் எண்.98411-06328 மூலம் திரு.அணில்குமார் அவர்களின் மொபைல் எண்.92800-74703 என்ற எண்ணிற்கு அவரை தொடர்புகொண்டு எனது மின் இணைப்பு சம்பந்தமாக பேசினேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தை திரு.தேசிங்கு அவர்களிடம் கொடுத்தால் உங்களுக்கு மின் இணைப்பு தருகிறேன் என்று கூறிவிட்டார். எனவே நான் 25.09.2026 அன்று மாலை சுமார் 7 மணிக்கு திரு.தேசிங்கு அவர்களை அவரது மொபைல் எண்.98401-66594 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு உதவி பொறியாளர் திரு.அணில்குமார் கூறிய விபரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் உதவி பொறியாளர் என்னிடம் உங்கள் மின்இணைப்பு தொடர்பாக பேசிவிட்டார். நீங்கள் நாளை ரு.15,000/- கொண்டு வந்து என்னிடம் தாருங்கள் நான் நாளைக்கே கூடுதல் மீட்டர் பொறுத்தி மின்இணைப்பு

கொடுத்துவிடுகிறேன் என்றார். நானும் சரி நாளை ரூ.15,000/- கொண்டுவந்து தருகிறேன். என்றேன். பின்னர் சிறிது நேரத்தில் திரு.தேசிங்கு என்னை மீண்டும் அவரே எனது மொபைல் எண்ணில் தொடர்புகொண்டு சார் உங்க கனெக்ஷன் Single phase என தவறாக நினைத்து ரூ.15,000/- என்று கூறிவிட்டேன். உங்களுடையது 3 phase எனவே நீங்கள் ரூ.50,000/- தரவேண்டும் என்று AE கூறியதாக சொன்னார், அதற்கு நான் கொஞ்சம் குறைத்துகொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் AE-யிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னார். இன்று 29.09.2026 ம் தேதி காலை நான் உதவி பொறியாளர் அவர்களது அலுவலகத்தில் அவரை பார்ப்பதற்காக சென்ற போது அலுவலகத்தில் அவர் இல்லை. பிறகு திரு.தேசிங்கை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது உங்களது இடத்திற்கு நானே வருகிறேன் என்று கூறினார் அதன்படி சுமார் 11.45 மணியளவில் எனது தென்றல் காலணியில் உள்ள இடத்திற்கு வந்து என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நான் புதியதாக கட்டுமானம் செய்த வீட்டினை காண்பித்தேன். அப்போது அவர் என்னிடம் மறுபடியும் உங்களுக்காக ஏ.இ அவர்களிடம் பேசி ரூபாய் 10,000/- குறைத்து ரூபாய் 40,000/-ற்கு முடிக்க பேசியுள்ளேன் அதில் முதல் தவணையாக ரூபாய் 20,000/- கொடுத்து விடுங்கள் வேலைகளை முடித்த பிறகு மீதம் ரூபாய் 20,000/- த்தை பெற்றுக்கொள்வதாகவும் கூறினார். எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லாததால் நேரடியாக லஞ்ச ஒழிப்புத்துறை சென்னை காவல் ஆய்வாளர் அவர்களிடம் என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட உதவி பொறியாளர் திரு.அனில்குமார் மற்றும் போர்மேன் திரு.தேசிங்கு ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட முன்பணம் ரூபாய் 20,000/- த்தை என்னிடம் வைத்துள்ளேன். இப்படிக்கு (D. சரவணப்பெருமாள்) ஒப்பம்// Cell: 9841106328 Sir, I received the complaint on 29.09.2026 at 17.15 hrs. in my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the Higher officer of the Directorate, I registered a case in V&AC, Chennai City-V Crime No.03/2026/AC U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day dated 30.09.2026 at 07.00 hrs and taken up for investigation. Sd// ....K.Bindhu, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Chennai City-V, Alandur, Chennai-16.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சென்னை அவர்களுக்கு அனுப்பியும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

30/09/2026

K.BINDHU
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Chennai City-V,
Alandur, Chennai-16.